# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

### எழுச்சியூட்டும் தஞ்சை விரிவடைந்த மாவட்ட செயற்குழு

அன்பார்ந்த தோழர்களே,

மே மாதம் 10ஆம் தேதி நடைபெற உள்ள 7ஆவது உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தலில் நமது BSNLஊழியர் சங்கத்தின் வெற்றியை உறுதிப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் 17.03.2016 அன்று தஞ்சையில் விரிவடைந்த மாவட்ட செயற்குழுக் கூட்டம் எழுச்சியுடன் நடைபெற்றது. மாவட்ட தலைவர் தோழர் இருதயராஜ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த விரிவடைந்த மாவட்ட செயற்குழுவில் 10 பெண்கள் உட்பட 80க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்றனர். தஞ்சை மாவட்டத்தின் முன்னாள் மாவட்ட செயலாளரும், சங்கத்தின் மாநில உதவி செயலாளருமான தோழர் நடராஜா இந்த செயற்குழுவை துவக்கி வைத்து உரையாற்றினார். மாவட்ட செயலாளர் தோழர் சுப்ரமணியன் ஆய்படு பொருட்கள் மீதான அறிமுக உரையாற்றினார். மாநில செயலாளர் தோழர் பாபு ராதாகிருஷ்ணன் நமது மத்திய மாநில சங்கங்கள் இந்த மூன்றாண்டு காலத்தில் செய்த சாதனைகளையும், செயல்பாடுகளையும் எடுத்துரைத்து இந்த சங்க அங்கீகார தேர்தலில் நமது சங்கத்தின் வெற்றியை உறுதிப்படுத்த தஞ்சை மாவட்டத்தில் நாம் செய்ய வேண்டிய பணிகள் தொடர்பாக எடுத்துரைத்தார். தஞ்சை மாவட்ட தோழர்கள் தங்களின் கருத்துக்களை விவாத்த்தில் எடுத்துரைத்த பின்னர் மாவட்ட செயலாளர் தோழர் சுப்ரமணியன் அதற்கு தொகுப்புரை நிகழ்த்தினார். இறுதியில் மாநில உதவி பொருளாளர் தோழர் மகேந்திரன் நிறைவுரை ஆற்றிய பின் மாவட்ட பொருளாளர் தோழர் ரமணன் நன்றியுரை ஆற்றி கூட்டத்தை நிறைவு செய்தார். வர இருக்கின்ற 7ஆவது உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தலில் BSNL ஊழியர் சங்கத்தின் வெற்றியை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் நடைபெற்ற இந்தக் கூட்டம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. இதற்காக உழைத்திட்ட தஞ்சை மாவட்ட சங்கத்தினை தமிழ் மாநில சங்கம் மனதார பாராட்டுகிறது.





